வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 20.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஏஐ உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ஐநா தலைமைச் செயலர் மற்றும் உலகத் தலைவர்கள் பலரை சந்தித்து பேசினார்.

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக, இந்தியாவை தொடர்ந்து பராமரிப்பதில், ஏற்றுமதித் துறையின் பங்கு, முக்கியமானது என்று, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

வடகிழக்குப் பிராந்தியத்தில், அந்தந்த மாநிலத்தின் விற்பனைப் பொருட்களுக்கு ஏற்ற வளர்ச்சி உத்திகளை, அரசு பின்பற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

நவீன துறைகளின் வேலை வாய்ப்புகளை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள, கல்வியுடன், திறன் மேம்பாடும் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

-----------------------

மோடி சந்திப்பு (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ஐநா தலைமை செயலர் திரு. அன்டோனியோ குட்டரேஸை-சை சந்தித்து பேசினார். தெற்குலக நாடுகளுக்கு கூடுதலாக குரல் கொடுப்பது உட்பட, ஐநா சீர்திருத்தங்கள் குறித்து, இருதலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான கருவியாக, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது குறித்தும், இதில் ஐநா எப்படியெல்லாம் பங்காற்றலாம் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இன்று, ஏஐ உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ஸ்லோவேக்கியா அதிபர் திரு.பீட்டர் பெல்லிகிரினி, இலங்கை அதிபர் திரு. அனுர குமாரா திஸ்சநாயகே, லிச்சன்ஸ்டீன் இளவரசர் அலோய்ஸ்

ஆகியோரையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு ரீதியில் சந்தித்து பேசினார்.

------------------------

*விவாதம்* (11)

இந்தியாவில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை பெருக்குவதில், திறந்த நிலை தொலை தொடர்புக் கட்டமைப்புகள், மற்றும், டிஜிட்டல் பொது வசதிகளின் பங்கு குறித்து, இன்று, இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டில், வல்லுநர்கள் மூலமான குழு விவாதம் இடம்பெற்றது. செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில், புதிய ஏஐ மாடல்களின் வெற்றிக்கு அப்பாற்பட்டு, டிஜிட்டல் பொது வசதிகளை அதிகரிப்பதான இந்தியாவின் அணுகுமுறைக்கும் முக்கிய பங்கு இருக்கும் என, நிபுணர்கள் இந்நிகழ்ச்சியில் கருத்து வெளியிட்டனர். எளிய முறையில், உள்ளூர் மொழியில் பயன்படுத்தக் கூடிய புதிய ஏஐ வசதிகளை, குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

------------------------

*சிலிக்கா ஒப்பந்தம் 1* (5)

உலக அளவில் வலுவான, பாதுகாப்பான சிலிக்கான் தொழில்நுட்பச் சூழல் ஒன்றை உருவாக்கும் வகையில், முக்கிய கனிமங்கள், செமி கண்டக்டர் உற்பத்தி, மற்றும், செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள, இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து, Pax Silica பிரகடனம் அறிவித்துள்ளன. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*சிலிக்கா ஒப்பந்தம்* 2 (14)

**(வாய்ஸ்)**

இந்தியா-அமெரிக்கா இடையிலான Pax Silica பிரகடனம் இன்று, புதுடெல்லியில், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டின் போது, கையெழுத்தாயிற்று. செமி கண்டக்டர், மற்றும் மின்னணு உற்பத்தித் துறையில், தலைமைத்துவ நாடாக மேம்படுவதே இந்தியாவின் இலக்கு என்று, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். இந்தியாவின் செமி கண்டக்டர் துறைக்கு, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில், திறன்மிகு இளைஞர்கள் தேவைப் படுவதாகவும், இத்தேவை முழுவதும், உள்நாட்டிலேயே பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் திறமை வாய்ந்த இளம் பொறியாளர்கள், மிகவும் சிக்கலான, நானோ-மீட்டர் சில்லுகளை வடிவமைத்து வருவதாகவும், நாட்டின் 315 கல்லூரிகள், மற்றும்,

பல்கலைக் கழகங்களில், மாணவர்கள் மூலமாகவே கணிப்பொறிச் சில்லுகள் வடிவமைக்கப் படுவதாகவும், அமைச்சர் மேலும் கூறினார்.

-----------------------

*வைஷ்ணவ் (8)*

இதற்கிடையே, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், ஆல்ஃபாபெட் மற்றும் கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சையை சந்தித்து பேசினார். டேட்டா மையங்கள், மருத்துவ வசதிகள், மற்றும், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி வசதிகளை நிறுவும் திட்டங்களில், கூகுள் நிறுவனத்தின் முதலீடுகள் குறித்தும், கல்வியில் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி, மற்றும், ஏஐ தரக் கட்டமைப்பை உருவாக்கும் பணிகளில் ஒத்துழைப்பது குறித்தும், இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது.

-----------------------

*ஃபட்நவிஸ் (11)*

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்கள் மூலம், உள்ளூர் அளவிலான வானிலைக் கணிப்புகள் உட்பட, விவசாயிகளுக்கு தேவையான முக்கியத் தகவல்களை உடனுக்குடன் வழங்க முடியும் என்று, மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்நவிஸ் கூறியுள்ளார். பூச்சித் தாக்குதல் குறித்த முன்னெச்சரிக்கை, நீர்ப்பாசனம், மற்றும், உரங்களின் பயன்பாடு குறித்த வழிகாட்டுதல் உள்ளிட்ட தகவல்களும் இதில் அடங்கும் என்று, அவர் இன்று புதுடெல்லியில், ஏஐ உச்சி மாநாட்டின் போது, செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். நடப்பு 2026ஆம் ஆண்டு, சர்வதேச வேளாண் மகளிர் ஆண்டாக கடைபிடிக்கப்படும் நிலையில், விவசாயம் தொடர்பான செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிகளில், பெண் விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

-----------------------

*ஏற்றுமதி பெருக்கம் (15)*

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக, இந்தியாவை தொடர்ந்து பராமரிப்பதில், ஏற்றுமதி துறையின் பங்கு, மிக முக்கியமானதாக இருக்கும் என்று, மத்திய தொழில், வணிகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், அமைச்சகம் மூலமான ஏற்றுமதி பெருக்க இயக்கத்தைத் தொடக்கி வைத்து பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். சிறு-குறு நிறுவனங்கள், மற்றும், ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு, உலக அளவிலான பதிவுகளை பெற எளிய நடைமுறை, ஏற்றுமதி பொருட்களுக்கான மேம்படுத்திய பரிசோதனைக் கட்டமைப்பு, கூடுதல் கடன்

வசதி, மாவட்ட அளவிலான பயிற்சித் திட்டங்கள், இ-வர்த்தக முறையிலான ஏற்றுமதி ஊக்குவித்தல் உட்பட, பல்வேறு அம்சங்களுக்கு, இந்த இயக்கத்தில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. ஏற்றுமதி அதிகரிப்பதால், நாட்டில் முதலீடுகளும் அதிகரித்து, வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும், 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், இதனால் உதவிகரமாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

-----------------------

*வடகிழக்கு* (14)

வடகிழக்கு மாநிலங்களுக்கு, மொத்தம் 4.48 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை பெற, முதலீட்டு உத்தேசங்கள் இறுதியாகி இருப்பதாக, வடகிழக்கு பிராந்தியத்தின் மேம்பாட்டிற்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் சாதாரண முறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களில் தற்போது 650 முக்கிய திட்டங்களை அமைச்சகம் அமல்படுத்தி வருவதாகவும், இத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றி முடிக்க சிறப்பு கவனம் செலுத்தப் படுவதாகவும் கூறினார். வடகிழக்கு பிராந்தியத்தில், அந்தந்த மாநிலத்தின் விற்பனை பொருட்களுக்கு ஏற்ப, பிரத்யேக வளர்ச்சி உத்திகளை, அமைச்சகம் பின்பற்றி வருவதாக திரு. சிந்தியா தெரிவித்தார். வடகிழக்கு மாநிலங்களில், குறிப்பாக, சுற்றுலா, வேளாண்மை, கைத்தறி, கைவினை, விளையாட்டு உள்ளிட்ட துறைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புகள் இருப்பதாக, அவர் மேலும் கூறினார்.

-----------------------

*புதுச்சேரி முகாம்* 1 (14)

புதுச்சேரியில், உயர்கல்வித் துறை சார்பில், லாஸ்பேட் மகளிர் பொறியியல் கல்லூரியில் நடைபெறும் 2 நாள் வேலை வாய்ப்பு முகாமை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன துறைகளில், அதிகரித்து வரும் வேலை வாய்ப்புகளை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள, கல்வியுடன், திறன் மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அவர் தமது உரையில் கேட்டுக்கொண்டார். நாட்டின் உயர்கல்வி கேந்திரமாக திகழும் புதுச்சேரியில், ஆண்டுக்கு 30 ஆயிரம் மாணவர்கள், படிப்பை முடித்து வெளியே வரும் நிலையில், இவர்கள் அனைவருக்கும் அரசே வேலை வழங்க இயலாது என்றாலும், வேலை வாய்ப்பிற்கான சூழலை உருவாக்கித் தருவது அரசின் கடமைதான் என்றும், இந்த அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும் வேலை வாய்ப்பு முகாம்களில், பெண்களும் அதிக அளவில் பங்கேற்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒருபகுதி.....

(வாய்ஸ்-கைலாஷ்நாத்)

*புதுச்சேரி முகாம்* 2 (4)

வேலை வாயப்பு முகாமின் தொடக்க விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், உயர்கல்வித் துறை செயலர் திரு. முகமது ஆசின் அபித் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-----------------------

*ரங்கசாமி* (14)

புதுச்சேரியில் மங்கலம் தொகுதிக்கு உட்பட்ட கணுவாப்பேட்டில், 2ஆம் கட்ட அம்ரித் திட்டம், மற்றும், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நிதி உதவியுடன், மொத்தம் 32.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மற்றும், மலக்கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கணுவாப்பேட்டில், புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தினசரி 3 மில்லியன் லிட்டர் திறன் கொண்டதாகவும், மலக்கசடு சுத்திகரிப்பு நிலையம், 100 கிலோ லிட்டர் திறன் கொண்டதாகவும் அமைய உள்ளன. தொடர்ந்து கணுவாப்பேட்டில், பொதுப் பணித் துறை மற்றும், பிரெஞ்ச் வளர்ச்சி முகமையின் நிதியுதவியுடன் 32.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணிகளையும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார்.

-----------------------

*காரைக்கால்* (7)

முதல்முறையாக வாக்களிக்க தகுதி பெற்றுள்ள இளம் வாக்காளர்களிடையே, மின்னணு வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை சார்பில், அறிஞர் அண்ணா அரசு கலை-அறிவியல் கல்லூரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில், மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில், வாக்குப்பதிவு செய்து, சந்தேகங்களுக்கு தெளிவு பெற்றனர்.

-----------------------

*வானிலை* (11)

நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல் மற்றும், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நேற்று நிலவிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி இன்று காலை வலுவிழந்தது. ஆயினும் அடுத்த 48 மணி நேரத்தில், நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல், மற்றும், தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில், புதிய

காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று, தென்தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழைக்கும், வடகடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளை, நெல்லை, குமரி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், தேனி மாவட்டங்களில், கனமழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

கிரிக்கெட் (8)

உலகக் கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், நாளை கொழும்பில் நடைபெறும் முதலாவது சூப்பர் 8 போட்டியில், நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகள் மோத உள்ளன. இந்தியாவின் முதலாவது சூப்பர் 8 போட்டி, வரும் ஞாயிற்றுக் கிழமை அகமதாபாத்தில் நடைபெறும். இப்போட்டியில் இந்தியா, தென்னாப்பிரிக்காவுடன் மோத உள்ளது. மார்ச் 4 மற்றும் 5ஆம் தேதிகளில் நடைபெற உள்ள அரையிறுதிப் போட்டிகளை தொடர்ந்து, இறுதிப் போட்டி, அடுத்த மாதம் 8ஆம் தேதி நடைபெறும்.

------------------------

எய்ம்ஸ் (17)

புதிய எய்ம்ஸ் மருத்துவ கழகங்களின் தலைவர்கள், மற்றும், செயல் இயக்குநர்களுக்கு இடையே, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தலைமைத்துவ மாநாட்டை, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தொடக்கி வைத்தார். எய்ம்ஸ் மருத்துவ கழகங்களில், மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி, மற்றும், நோயாளிகளுக்கான சிகிச்சையில், சமநிலையான அணுகுமுறை ஒன்றை கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மருத்துவ சிகிச்சையின் தரம் குறித்து, நோயாளிகளிம் இருந்து பின்னூட்டம் பெற்று, தரத்தை உயர்த்த, தனிக் கட்டமைப்பு தேவை என்றும் அவர் கூறினார். நாட்டின் புதிய எய்ம்ஸ் மருத்துவ கழகங்கள், தங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மூலம், மேலும் வளர வேண்டும் என்றும், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை, மருத்துவத் துறையில் அதிகம் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்தல் அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். ஒவ்வொரு புதிய எய்ம்ஸ் மருத்துவ கழகத்திலும், ஜன் அவுஷதி கேந்திரங்கள், மற்றும், அம்ரித் மருந்தகங்களை அமைக்கவும், பொது சுகாதாரத் துறையில், எய்ம்ஸ் மருத்துவ கழகங்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவும் அவர் அறிவுறுத்தினார்.

------------------------

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஏஜ உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ஐநா தலைமைச் செயலர் மற்றும் உலகத் தலைவர்கள் பலரை சந்தித்து பேசினார்.

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக, இந்தியாவை தொடர்ந்து பராமரிப்பதில், ஏற்றுமதித் துறையின் பங்கு, முக்கியமானது என்று, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

வடகிழக்குப் பிராந்தியத்தில், அந்தந்த மாநிலத்தின் விற்பனைப் பொருட்களுக்கு ஏற்ற வளர்ச்சி உத்திகளை, அரசு பின்பற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

நவீன துறைகளின் வேலை வாய்ப்புகளை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள, கல்வியுடன், திறன் மேம்பாடும் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்திச் சுருக்கம் நிறைவு பெறுகிறது.